செய்தி வெளியீடு எண்: 170 நாள் : 24.3.2016

**செய்தி வெளியீடு**

**தேர்தல் விதி மீறல் – ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற அமெரிக்க டாலர்கள், செல்போன்கள், வாஷின் மெஷின்களும், ரொக்கம் ரூ.84 லட்சமும் 22.3.2016 அன்று பறிமுதல்**

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் தேர்தல் பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.10.19 லட்சம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.3.40 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரு.4 லட்சம், திருச்சி மாவட்டத்தில் ரூ.1.21 லட்சம் மற்றும் 149 புடவைகள், கிருஷ்ணகிரியில் ரூ.5.50 லட்சம், விருதுநகரில் ரூ.4.1 லட்சம், திருவாரூர் மாவட்டத்தில் ரூ.1.16 லட்சம், மதுரை மாவட்டத்தில் ரூ11.57 லட்சம் மற்றும் 15 குக்கர்கள், 25 சோலார் விளக்குகள், 700 டெட்டனேட்டர், 1200 ஜெலட்டின் குச்சிகள் உட்பட மொத்தம் ரூ.42,96,929/– பறிமுதல் செய்யப்பட்டது.

தேர்தல் கண்காணிக்கும் குழுவினரால் (SST) கிருஷ்ணகிரியில் ரூ.3.10 லட்சம், திருவாரூர் மாவட்டத்தில் ரூ.1.75 லட்சம், கோவை மாவட்டத்தில் ரூ.9.12 லட்சம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 153 மைக்ரோமேக்ஸ் செல்பேசிகள், வேலூர் மாவட்டத்தில் ரூ.4.13 லட்சம் மதிப்புள்ள 6171 அமெரிக்க டாலர்கள், 9 வாஷிங் மெஷின்கள், ரூ.27 லட்சம் ரொக்கம், திருச்சி மாவட்டத்தில் 45.500 கி.கி. வெள்ளி நகைகள், திண்டுக்கல் மாவட்டத்தில் 56 செல்போன்கள் மற்றும் மதுவகைகள் என ரூ.41 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 22.3.16 வரை மொத்தம் ரூ.6,88,09,663/–ம் பறக்கும் படையினரால் ரூ.5,90,55,946/– என மொத்தம் ரூ.12,78,65,609/– ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அனுமதியில்லாமல் வாகனங்களில் கட்சிக் கொடியுடன் சென்றது, சுவரில் கட்சி விளம்பரம் செய்தது, ஆட்டோ ரிக்ஷாவை தேர்தல் விளம்பரத்திற்கு பயன்படுத்தியது போன்றவற்றிற்காக அரசியல் கட்சியினர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியதாக (Model code violation-1) 24.3.16 வரை 2,06,826 புகார்கள் பெறப்பட்டு, 1,22,357 புகார்களில் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டதால் புகார்கள் விலக்கி கொள்ளப்பட்டன. இதுவரை இப்பிரிவில் 1593 வழக்குகள் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டன. வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியது, அனுமதி பெறாமல் கூட்டம் நடத்தியது, ஒலிபெருக்கி விதியினை மீறியது (Model code violation-1A) போன்ற காரணங்களுக்காக இதுவரை 1510 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9